[*1995 மே 5*

8. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஈ) கள்ளச் சாராயம் இல்லாத மூன்று தொகுதிகளின் உறுப்பினர்களுக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு முக்கிய அறிவிப்பு. தமிழக அரசின் மதுவிலக்கு உயர்மட்டக் குழு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைந்து சில முக்கிய முடிவுகள் எடுத்தது என்பது பற்றிப் பேரவைக்கு ஏற்கனவே நான் அறிவித்திருக்கிறேன். அந்த முடிவுகளில் ஒன்றின்படி தமிழகத்திலுள்ள சட்டமன்றத் தொகுதிகளில் எந்த எந்தத் தொகுதிகள் முழுமையாக கள்ளச் சாராயம் இல்லாமல் இருக்கிறதோ அந்தத் தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசின் சார்பில் கேடயம் வழங்கப்படவேண்டும் என்றும் அவ்வாறு கேடயம் வழங்கப்பட இருக்கும் செய்தி பேரவையில் அறிவிக்கப்படவேண்டும் என்றும் முடிவு செய்திருந்தது. அந்த வகையில் தமிழகத்திலேயே கள்ளச் சாராயம் முழுமையாக ஒழிக்கப்பட்டு, துளியும் இல்லாமல் இருந்த தொகுதிகள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பர்கூர் தொகுதியும் (மேசையைத் தட்டும் ஒலி) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதியும் என்பதை ஏற்கனவே சென்ற ஆண்டு அறிவித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு எடுத்த ஆய்வின்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அதே பர்கூர் தொகுதி மீண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) கள்ளச் சாராயம் துளியும் இல்லாத அளவுக்கு உள்ள தொகுதி என்று தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் வால்பாறை சட்டமன்றத் தொகுதியும் கள்ளச் சாராயம் இல்லாத தொகுதி என்று தொடர்ந்து (மேசையைத் தட்டும் ஒலி) அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, அந்த இரண்டு தொகுதிகளோடு இன்னொரு தொகுதியும் இந்த ஆண்டு அந்தப் பட்டியலில் சேர்ந்திருக்கிறது. அது பெரியார் மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத் தொகுதி என்பதைப் (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைக்கு மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறேன். அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களும் இந்த ஆண்டு கேடயம் பெறுகிற பட்டியலில் சேருகிறார் என்பதை மகிழ்ச்சியோடு அறிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில் மாண்புமிகு

1995 மே 5] [பேரவைத் தலைவர்]

முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அ. ஸ்ரீதரன் அவர்களுக்கும் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் மனமுவந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* விரைவில் உரிய ஒரு நல்ல விழாவில் அத்தகைய கேடயங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இவ்வளவு நல்ல சட்டமன்ற உறுப்பினர்கள் பற்றிய செய்தியை இப்போது சொன்னேன்.

பிற்பகல் *5–35*

(உ) உறுப்பினர் திரு. கே. ஏ. மனோகரன் விடுவிக்கப்பட்டது குறித்து வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தர்மபுரி மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டிருந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஏ. மனோகரன் அவர்கள் இன்றைக்கு விடுதலை செய்யப்பட்டதாகச் செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளை வினாக்கள்-விடைகள் நேரத்திற்கான விதியைத் தளர்த்தி வைப்பது பற்றிய தீர்மானம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு, சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் "வினாக்கள்-விடைகள்" என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி *32*–ஐ *6.5.1995*–ஆம் தேதியன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்" என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1995.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன் வடிவுகள் (ஆய்வு செய்தல்). *1995*–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *16/1995*) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1995*–ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் *16/1995*) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் வேறு எவரேனும் கருத்து தெரிவிக்கப் போகிறீர்களா?

@ *4-5-1995* ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.